REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 பெப்ரவரி 3 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

73 ஆவது சுதந்திர தினம்

வரு. 89 இல. 29 | Wednesday 03, February, 2021 | 20பக்கங்கள் | 30/-

இந்தியாவுக்கு வழங்கும் யோசனை கடந்த அரசின் பொறி;

## கிழக்கு முனையம் 100 வீதம் துறைமுக அதிகார சபைக்கே

### மேற்கு முனையம் இந்தியா, ஜப்பானுடன் கூட்டு முயற்சியில் அபிவிருத்தி

**ஷம்ஸ் பாஹிம்**

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்வாகம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் வைத்திருக்கவும் மேற்கு முனையத்தை இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகள் பெயரிடும் தரப்புடன் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக இணைஅமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் யோசனை எமது அரசின் யோசனையல்ல. கடந்த அரசு முன்வைத்த பொறியே அது எனவும் அவர் குறிப்பிட்டார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. 06

**அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென்கிறார் அமைச்சர் உதய கம்மன்பில**



கொழும்பு துறைமுக ஊழியர்களின்

## சட்டப்படி வேலை போராட்டம் கைவிடப்பட்டது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு துறைமுக ஊழியர்களின் சட்டப்படி வேலை போராட்டம் நேற்று கைவிடப்பட்டது. நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து முற்பகல் 10. 30 மணியளவில் சட்டப்படி வேலைப் போராட்டத்தை கைவிட்டதாக துறைமுக ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கத் தலைவர் பிரசன்ன களுதரகே தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் நூற்றுக்கு நூறு வீதம் துறைமுக அதிகார சபையின் கீழ் முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதையடுத்து தமது சட்டப்படி வேலை போராட்டத்தை கைவிட்டதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சில தினங்களாக கொழும்பு துறைமுக ஊழியர்கள் சட்டப்படி வேலை போராட்டத்தை மேற்கொண்டனர். அதனை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் நேற்றுமுன்தினம் மேற்படி தொழிற்சங்கத்தினருடன் பிரதமர் 06



இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு;

## தகுந்த பதிலை ... வழங்க அரசு த...

### அமைச்சரவை பேச்சாளர் அ...




**ஷம்ஸ் பாஹிம்**

இலங்கை மீது சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு ஐ.நா மனித உரிமை அமர்வில் மிகச் சிறப்பாக முகங்கொடுக்கும் வல்லமை இலங்கைக்கு இருக்கிறது. குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதில்களை உரிய நேரத்தில் வழங்க இருக்கிறோமென அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானபூர்வமாக இவற்றுக்கு பதில் வழங்கப்படும். அமெரிக்காவின் இணை அனுசரணையுடன் கடந்த அரசில் முன்வைத்த யோசனையின் பலனை இன்று அனுபவிக்கிறோமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கு... Zoom ... நடைபெற்... மீறல் குற்... எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

ஐ.நா மனித உரிமை அமர்வில் பங்கேற்கும் இலங்கை குழு தொடர்பில் இதுவரை இறுதி முடிவு செய்யப்படவில்லை. வழங்க வேண்டிய பிரச்சினைகள் குறித்து பிரித்தறிவது முக்கியம். ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு அரசியல் குறிக்கோள்கள் இருக்கின்றன. எமக்கிருக்கும் அழுத்தம் தொடர்பில் தெரிந்து 06



தனது சேவைக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் Mrs.Pham Thi Bich Ngoc, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மரியாதை நிமித்தம் நேற்று (02) சந்தித்து உரையாடியபோது..

‘நீர்ப்பாசன சுபீட்சம்’; குளங்கள் புனரமைப்பு

## ஜனாதிபதி தலைமையில் குளங்கள் புனரமைக்கும் தேசிய திட்டம்

**அமைச்சர் சமல் ராஜபக்ஷ**



‘நீர்ப்பாசன சுபீட்சம்’ என்ற தொனிப் பொருளில் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன நீர் நிலைகளை விரைவாக புனரமைக்கும் தேசிய திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை மறுதினம் (05)ஆம் திகதி பளுகஸ்வெவ விலும் 06ஆம் திகதி அநுராதபுரம் மாவட்ட தலாவயிலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய 06

## கல்வித்துறைக்கு கொரோனாவின் தாக்கம் இனி தடையாக அமையாது

### சிறந்த திட்டமிடலுக்கு அமைய பாடசாலைகள் மீள ஆரம்பம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒரு தடையாக அமையாதென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 06

PCR பரிசோதனை, சுகாதார பாதுகாப்பு விதிகளுடன்

## 73ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டம்



அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார விதிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தேசிய சுதந்திர நிகழ்வுகள் நடத்தப்படுமென தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலாளர், இது தொடர்பில் எந்தவித அச்சமும் தேவையில்லை என தெரிவித்துள்ளார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வில் மற்றும் மரியாதை அணிவகுப்பில் கலந்து கொள்ளும் அனைவரும் பிசிஆர் அல்லது அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் 06

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான

## இன்றைய போராட்டத்தில் சாணக்கியனுக்கு தலை...

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தோர்

## புத்தளம் வாக்காளர் பட்டியலில் இணைப்...

## நாட்டில் கொரோனாவுக்கு பலியான முதல் டாக்டர்

## தென் மாகாண ஆளுநருக்கு கொரோனா

தென் மாகாண ஆளுநர் பேரா...